IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
EA.No.12/2026
in
EP.No.22/2023
in
OS.No.209/2010

Deposition of Witness for PW.1

Name : திரு.சுதாகர்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.07.2026

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் மனுதாரர். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். நான் நிறைவேற்றும் மனு EP.No.57/2008 ல் பத்மானபபுரம் சார்பு நீதிமன்ற வழக்கில் வழக்கு பட்டிகை சொத்தை ஜப்தி செய்து நீதிமன்ற ஆமீனா தாக்கல் செய்த list ம.சா.ஆ.1. அந்த நிறைவேற்றும் மனுவில் உள்ள Test Order சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2. பட்டிகை சொத்தை ஏலத்திற்கு விற்பனை செய்ய பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்ட ஏல விளம்பரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3. பட்டிகை சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் ம.சா.ஆ.4. பட்டிகை சொத்தை விற்பனை செய்த அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5. பட்டிகை சொத்தை ஏலத்தில் விற்றதற்கான ஏல சான்றிதழ் ம.சா.ஆ.6. பட்டிகை சொத்தை ஏலத்தில்

எடுத்தவர்கள் பட்டிகை சொத்தை நீதிமன்றம் மூலம் சுவாதீனம் செய்து வாங்கியது சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7. நிறைவேற்றும் மனு EP.57/2008 ல் நிறைவேற்று மனு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8. பட்டிகை சொத்தை கிரயம் வாங்கியதற்கான கிரய பத்திரம் அசல் ம.சா.ஆ.9. பட்டிகை சொத்தை கிரயம் வாங்கிய பின் புதிதாக கட்டிடம் கட்ட வாங்கப்பட வரைபட அனுமதி நகல் ம.சா.ஆ.10. புதிதாக கட்டிய கட்டிடத்திற்கான கட்டிட வரி ரசீது ம.சா.ஆ.11.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.